நல்லூர் இணை நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (15-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 353

புலிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ்நாடு அதிகாரிகள் பின்னடிப்பு!

நீதி மற்றும் காவல்துறையினர் அச்சமடைந்துள்ளதாக மகஜர்

சென்னை, நவம்பர் 15

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போக்கினால் விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நீதி மற்றும் காவல்துறையினர் பின்னடித்து வருகின்றனர். இது விடயத்தில் இவ்விரு துறைகளையும் சேர்ந்த அதிகாரிகள் அச்சமடைந்திருப்பதாக இந்திய ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக தமிழக நல்லாட்சி இயக்கம் சமர்ப்பித்த அறிக்கையிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கில தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் வைத்து ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

36 கோடி ரூபா செலவில் கடற்படைக்கு 4 படகுகள்!

கொழும்பு, நவ. 15

கொழும்பு 'டொக்யார்ட்' நிறுவனம் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாவனைக்கென நான்கு அதிவேக பீரங்கிப் படகுகளை அமைக்க உள்ளது. இதற்கு 36 கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 15 பொறியியலாளர்களின் உதவியுடன் பிரான்ஸில் இரண்டு பீரங்கிப்படகுகள் கட்டப்படும் என்றும்—

இலங்கைப் பொறியியலாளர்கள் பிரான்ஸில் 4 மாதங்களுக்குத் தங்கியிருந்து பீரங்கிப் படகுகள் பற்றிய தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் பெற்று நாடு திரும்பி ஏனைய இரண்டு பீரங்கிப் படகுகளையும் அமைப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு முடிவடைவதற்கு முன் இந்த 4 பீரங்கிப் படகுகளும் கடற்படையிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

(ஒ-த)

தமிழீழ மீட்பு நிதி 1,000 பேருக்கு மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் கடன் பத்திரதாரர்களின் கடன், 1991 மாவீரர் வாரத்தில் மீளவிப்புச் செய்யப்படவிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி அறிவித்திருக்கிறார்.

தமிழீழ மீட்பு நிதி மீளவிக்கப்படும் இடம், காலம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என நிதிப்பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

மீளளிப்புப் பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்களின் ஒரு தொகுதி 2ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

(உ)

அராலித்துறை படையினர் நேற்று ஷெல் தாக்குதல்

மீனவர்களை நோக்கியும் சூடு

யாழ்ப்பாணம், நவ. 15

அராலித்துறைப் பகுதியில் உள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்று ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அதே சமயம் சரமாரியான வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

கல்லுண்டாய் வெளி, அராலி வட்டுக்கோட்டை பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

அராலி கடலில் நேற்றுக் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கியும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். தெற்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லை.

இதற்கிடையில்—

மாதகல் இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை 3 மணியளவில் பண்டத்தரிப்பு, சிங்கலாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

(ஒ-5-15-17-28-12)

சிரமதானம், கருத்தரங்குகளுடன் மாவீரர் எழுச்சிவாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 15

மாவீரர் வாரத்துக்கு முன்னோடியான மாவீரர் எழுச்சி வாரம் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இன்று ஆரம்பமாகிறது.

இன்று முதல் 20 ஆம் திகதி வரையான மாவீரர் எழுச்சி வாரத்தில் கருத்தரங்குகள், சிரமதானம், மரம் நடுதல் என்பன பிரதான நிகழ்வுகளாக அமையும்.

எழுச்சி வாரத்தின் போது இடம்பெயர்ந்தோர் முகாம்கள், வைத்தியசாலைகள், வீதிகள், வாய்க்கால்கள், பாடசாலைச் சுற்றுப்புறங்கள் என்பனவற்றை துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகள் நடைபெறும். இச்சிரமதான வேலைகளில் பொதுமக்கள், பொதுத்தாபனங்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்தோர் கலந்து கொள்வர்.

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் கருத்தரங்குகள் மாலை வேளைகளில் நடை

5 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டில் புயல், மழை! 64 பேர் வரை உயிரிழந்தனர்

சென்னை, நவ. 15

தமிழ் நாட்டில் புயல் மற்றும் மழை காரணமாக பேரழிவு ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பல இடங்களிலும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 64 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் வளைகுடாவில் நிலை கொண்டிருந்த புயல் நேற்று முன்தினம் தூத்துக்குடி அருகே கரையைக் கடந்த பொழுது பலத்த மழை பெய்து, பல இடங்களில் பெரும் வெள்ளம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் ஆறுகள் பல உடைப்பு எடுத்திருப்பதாகவும், உடைமை அழிவுகளும் ஏற்பட்டுள்ளன என்றும் பல லாரிக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் மட்டும் வெள்ளத்தினால் 46 பேர் வரையில் உயிரிழந்து விட்டனர்.

(5ஆம் பக்கம் பார்க்க)

மா இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறையில் 'குமாரி' கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் மீண்டும் நேற்று ஆரம்பமாகின.

கால நிலை சீரில்லாத காரணத்தினால் கடந்த இரு தினங்கள் மா இறக்கும் வேலைகள் விதம்பிதமடைந்திருந்தன.

(ஒ-144)

தனுஷ்கோடி நகரம் கடல் நீரில் மூழ்கியது!

இராமேஸ்வரமும் பாதிப்பு

சென்னை, நவ. 15

தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்தின் தென்முனைப் பகுதியான தனுஷ்கோடி நகரம் முழுவதும் கடல் நீரில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரக் நகருக்குள்ளும் கடல் வெள்ளம் புகுந்திருப்பதாகவும் ஆனால் அதிகுள்ள இராமேஸ்வரம் ஆலயம் பாதுகாப்பாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பல இடங்களிலும் மிக விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ரயில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக முதல்வர் ஜெயலலிதா புதுடில்லியிருந்து அவசரமாக நேற்று சென்னை திரும்பினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

சூறாவளி அனர்த்தம்:

பலியானோர் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்தது

கொழும்பு, நவ. 15

கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் வீசிய சூறாவளி மற்றும் மழை, வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்குக் கரையில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும் புத்தளத்துக்கும் இடையே பலத்தசேதம் ஏற்பட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(5ஆம் பக்கம் பார்க்க)

காடும் கனிவாய் வளர்ந்திடவே
நாடும் நலமாய் ஓங்கிடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெஸ்ட் சரித்திரத்தில் முதன்முறை

டெலிவிஷனை பார்த்து மத்தியஸ்தர் தீர்ப்பு!

டெண்டுல்கர் ஆட்டமிழந்தார்

டேர்பன், நவ. 15

கிரிக்கெட் டெஸ்ட் சரித்திரத்தில் முதல் தடவையாக—

ஆட்டத்தை மீண்டும் டெலிவிஷன் திரையில் பார்த்து, அதன் மூலம் துடுப்பாட்டக்காரர் ஒருவர் ஆட்டமிழந்தாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஆட்டமிழந்த வீரர் இந்தியாவின் இளம் ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் ஆவார்.

இந்திய — தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்று வரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில், இரண்டாம் நாளான நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

ஆட்டத்தில் இடம் பெறும் சம்பவங்கள் தொடர்பாக மத்தியஸ்தர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால்—

அந்தச் சம்பவத்தை மீண்டும் டெலிவிஷன் திரையில் மீட்டுப் பார்த்து (Re-Play) முடிவு செய்வது என்று மேற்படி டெஸ்ட் ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்திருந்தனர்.

அந்த முடிவின் கீழ் —

சச்சின் டெண்டுல்கர் "ரன் - அவுட்" முறையில் ஆட்டமிழந்தார் என முடிவு செய்யப்பட்டது.

அந்தச் சம்பவம் குறித்து தென்னாபிரிக்க அணியினர் முறையீடு (Appeal) செய்த போது, ஆட்டக்களத்தில் இருந்த இரு மத்தியஸ்தர்களில் ஒருவர் அது பற்றி முடிவு செய்யும் பொறுப்பை—

மைதானத்துக்கு வெளியில் கண்ணாடி அறை ஒன்றுக்குள் அமர்ந்திருந்தவாறு டெலிவிஷன் திரையில் ஆட்டத்தை கவனித்துக் கொண்டிருந்த மூன்றாவது மத்தியஸ்தரிடம் ஒப்படைத்தார்.

அவர் அந்தச் சம்பவத்தை டெலிவிஷன் திரையில் மீட்டுப் பார்த்து டெண்டுல்கர் ஆட்டமிழந்தார் என்று அறிவித்தார்.

ஆட்டத்தில் ஏற்படும் சந்தேகங்கள் தொடர்பாக அவற்றை டெலிவிஷன் திரை மீட்டுப் பார்த்து முடிவு செய்யும் நடைமுறை இப்போது தான் முதல் தடவையாக டெஸ்ட் ஆட்டங்களில் அறிமுகப்படுத்தப்படிருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களை எடுத்திருந்தது. முன்னதாக தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களை எடுத்தது.

(உ)

தீர்வு வந்தால்தான் வடக்கு - கிழக்கில் அபிவிருத்தியாம்!

கொழும்பு, நவ. 15

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் அப் பகுதிகளில் பாரிய அபிவிருத்திகளைச் செய்ய முடியாது. எனவே வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்ற கூறுவதில் அர்த்தமில்லை;

இந்துசமய, கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி தேவராஜ் வரவு செலவுத் திட்டம் இரண்டாவது வாசிப்பின்போது நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

சகல கட்சிகளும் இணைந்தாலே இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

(ந)

தமிழீழ மீட்பு நிதி மீளப்பெறுவோர்

யாழ்ப்பாணம், நவ 15

மாவீரர் வாரத்தை ஒட்டி தமிழீழ மீட்பு நிதியைத் திருப்பப் பெறுவோரின் ஒரு தொகுதியினரின் கடன் பத்திர இலக்கங்கள் வருமாறு:-

நல்லூர்

யா/ந/21	85	490
506	2397	4209
1299	3447	5605

யாழ்ப்பாணம்

யா/யா/59	178	544
3417	4318	195
4687		

கோப்பாய்

யா/கோ/3795	5674	715
3145	6315	

மானிப்பாய்

யா/மா/2834	3667	14
119	3292	

தெல்லிப்பளை

யா/தெ/139	602	918
4138		

சங்கானை

யா/ச/3189	3184	4115

காரைநகர்

யா/கா/356	79	714

வேலணை

யா/வே/176	218	1284
1771	1887	87
829	1503	1981

கரவெட்டி

யா/க/20	274	477
829	834	27
128	2697	3263
4190		

பருத்தித்துறை

யா/பரு/109	376	729

சாவகச்சேரி

யா/சா/569	816	66
3426	4311	

வெளியகலவு

யா/வெ/41	705	903
794	837	

உடுவில்

யா/உ/3026		

நல்லூர்

மாசி — 1992

யா/ந/18	142	277
334	844	3124
4050	4265	5780
6013		

பங்குனி — 1992

யா/ந/219	381	1402
2083	2351	2517
2584	3581	4109
4792		

சித்திரை — 1992

யா/ந/98	372	580
1090	2125	3755
3797	5246	5580
5875		

வைகாசி — 1992

யா/ந/234	386	401
785	866	1781
2627	3541	4552
5206		

ஆனி — 1992

யா/ந/64	464	1215
1692	2437	3136
4269	5113	5392
5528		

ஆடி — 1992

யா/ந/214	310	362
573	612	875
892	2003	5482
5623		

ஆவணி — 1992

யா/ந/197	744	822
825	1668	1767
2464	2589	2905
5569		

புரட்டாதி — 1992

யா/ந/103	228	232
684	721	943
2712	3329	4827
5733		

ஐப்பசி — 1992

யா/ந/81	287	826
964	1481	2806
4243	4436	4842
5508		

(6 ஆம் பக்கம் பார்க்க)

வட - கிழக்குக் கடலில் மூழ்கிய

இந்திய சரக்குக் கப்பலின் கப்டனைக் காணவில்லை

நேற்று முன்தினம் வடக்கு-கிழக்கு கடலில் மூழ்கிய இந்திய சரக்குக் கப்பலின் கப்டன் காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கப்பலில் இருந்த ஏனைய மாலுமிகள் உட்பட 14 பேரும் ஸ்ரீலங்கா கடற்படையினரால் மீட்கப்பட்டுவிட்டதாகவும் கொழும்பு துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட இந்த சரக்குக் கப்பல் கடந்த வியாழக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்ட பின்னர், மன்னார் கிரிகுடாவில் வீசிய சூறாவளியில் சிக்கி, கடலில் மூழ்கியது என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

(உ-6)

கிளிநொச்சி, முல்லைத்தீவில்

புதிய வகை புழுக்களால் நெற் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் கால போக நெற்செய்கை இனங்காணப்படாத புதிய வகை புழுக்களின் தாக்கத்தால் பாதிப்படைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் பெரும் எண்ணிக்கையான புழுக்கள் நெற்பயிர்களையும், மற்றும் தாவரங்கள் செடிகளையும் அழித்து நாசமாக்குவதாக அங்குள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல் வயல்கள் அழிவுக்குட்பட்டு வெறும் வெளிகளாகி வருவதாகவும்— தாவரங்கள், செடிகள் என்பன மழைக் காலத்திலும் இலைகளின்றிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனங்காண முடியாத இந்தப் புழுக்களை அழிக்க பல தடவைகள் மருந்து வகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-5)

சவான் ஜெயலலிதா சந்திப்பு

புதுடில்லி, நவ. 15

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று புதுடில்லியில் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானை அவரது அலுவலகத்தில் சந்தித்து, சுமார் அரை மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார்.

இருவரும் மாநில சட்ட ஒழுங்கு நிலைமை, மற்றும் மத்திய — மாநில நலன்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 24 — 01 — 1924

மறைவு: 16 — 10 — 1992

திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம்

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்்தியேட்டிக் கிரியைகள் 15-11-92 இன்று எமது இல்லத்தில் நடைபெறும்.

சி. இராசேந்திரம்,
(சகோதரன்)
ப. யோகநாதன்.
(மருமகன்)

இலக்ஷ்மி வாசா,
வல்லை வீதி,
அச்சுவேலி.

(23276)

மரண அறிவித்தல்

திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தையா

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தையா 14-11-92 நேற்று மாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையா (முன்னாள் புகையிரதப் பகுதி) அவர்களின் அன்பு மனைவியும், திரு. க. ஐயாத்துரை (முன்னாள் அரசாங்க அச்சுத் திணைக்களம்), திரு க. கனகரத்தினம் (முன்னாள் புகையிரதப் பகுதி), திரு. க. பாலகப்பிரமணியம் (முன்னாள் புகையிரதப் பகுதி - தற்போது கனடா), திருமதி தனலக்ஷ்மி, திருமதி பரமேஸ்வரி (ஆசிரியை, தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலை) திருமதி இராஜேஸ்வரி, திரு க. கிறாசா (பிரான்ஸ்), திரு. க. சந்திரசேகரம் (அரசினர் வைத்தியசாலை, பூவரசன் குளம்), திரு. க. குணசேகரம் (ஓமான்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. தம்பிரத்தினம் (முன்னாள் உதவி வைத்திய அதிகாரி), திரு க. கார்த்திகேசு (ஆசிரியர், சேர் கனகசபை வித்தியாசாலை, பன்னாலை), திரு. க. சிவநாதன், திருமதி இராசம்மா (முன்னாள் ஆசிரியை, சேர் கனகசபை வித்தியாசாலை, பன்னாலை), திருமதி கனகாம்பிகை, திருமதி நாகபூஷணி ஆகியோரின் அன்பு மாமியும், செல்வன் அரவிந்தன் (சுவிஸ்), தயாளகுமார் (மாணவன், பெளதிக விஞ்ஞானம், யாழ். பல்கலைக்கழகம்), பரமச்சந்திரன் (கனடா), பாலகுமார் (கனடா), பாலகணேஷ் (கனடா), பரணீதரன், துர்க்கேஸ்வரன், கி.பிரசாந்த் (பிரான்ஸ்), திருமதி பா. கோமதி (கனடா), செல்வி தயாமதி (பலாலி ஆசிரியர் கலாசாலை), பிரேமராஜனி, துர்க்கேஸ்வரி, சி. பிரிந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இவரது பெறாமகன் திரு. க. கனகராசாவின் கன்னாகம் கிழக்கு இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கன்னாகம் கொத்தியால் இந்து மயானத்துக்கு (15-11-92) இன்று பி. ப. 1.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

கன்னாகம் கிழக்கு,
கன்னாகம்.

(23280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகர் ... றம்
யாழ்ப்பாணம்

நன்றி

எம்மால் கடந்த ஒன்பதாம் திகதி அன்று வைதடி வைரச் கிறவர் இல்லத்தில் நடத்தப்பட்ட வினை யாட்டுப் போட்டியில் பரிசளிப்பதற்காக புதிய உடைகள், பாடசாலை உபகரணங்கள், கதைப்புத்தகங்கள் முதலியன வாங்குவதற்கு நிதியுதவிய வழங்கிய திருவாளர்கள் ஐங்கரநேசன், சோபிதாஸ், சந்தையா, திருமதி மாணிக்கப்பிரமணியம் மற்றும் வைதடி வாழ்ந்தவர்களுக்கும், வைதாளத்தைத் தந்துதவிய நவீன் பாடசாலை அதிபருக்கும் யாழ்ப்பாணம் வடக்கு வியோ கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(சி/3781)

மரவேலைப் பயிற்சி

தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்த இளைஞர்களுக்கு அகில உலக கெயர் நிறுவனம் நடத்தும் மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பங்களை,

யாழ்ப்பாணம், 304, பிரதானவீதி,
எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக் கல்லூரி

இயக்குநரிடம் 17-11 1992க்கு முன்பு நேரில் சமர்ப்பிக்கவும்.

- இயக்குநர்.

(5572)

வர்ம சிகிச்சை (பயிற்சி நெறி)

[தமிழ் அக்குபங்சர்]

மேற்படி பயிற்சி நெறி 06 - 12 - 1992இல் ஆரம்பமாகின்றது. மனிதநேய அடிப்படையில் எம் மக்களுக்கு சேவை செய்விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. எவ்வித மருந்துகளும் இன்றி நோய் தீர்க்கும் அற்புதமான வைத்தியமுறை. இப் பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். (பிரதி ஞாயிறு தோறும்) க. பொ. த. (சா/த) சித்தி பெற்ற மாவட்ட அவைப் பகுதி பிரதேச விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதத்துடன் வகுப்புவரில் அனுமதி பெறலாம்.

அதிபர்,
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 06, பருத்தித்துறை வீதி, (1ஆம் ஒழுங்கை),
யாழ்நகர்.

(சி-3779)

இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் வசீதரன்

அளவெட்டி நசன் - மஞ்சுளா தம்பதிகளின் தவப் புதல்வன் வசீதரன் லம்மி, டடி, அங்கிள் (ஜீவன்) உடன் தனது 2ஆவது பிறந்தநாளை இன்று (15-11-92) கவிஸில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை தாவடி அம்மம்மா, அம்மப்பா, மாமா மார், கற்குளம் கலா அத்தை, கரம்பகம் அம்மா, அப்பா, அளவெட்டி அப்பம்மா, கொட்டடி தாத்தா, பாட்டி ஆகியோர் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(23269)

உயிரை வெல்லமென சுவைக்காது சாவினை துச்சமாக கருதியவர்கள்

உயிர்களை நேசித்தவர்கள் - ஆனால், தங்கள் உயிர்களை அல்ல. சாவினை ஏற்றவர்கள் - ஆனால், பிறரின் சாவினையல்ல. இவர்கள் தான் மாவீரர்கள்;

"வாழவேண்டுமென்ற துடிப்பு சாவிலும் வலியது" என்பது ஒரு வியட்நாமியக் குரல் - எங்களது மாவீரர்கள் நிதர்சனமாக்கினார்: வாழவேண்டுமென்ற துடிப்பு அவர்களிடம் அபாரம், ஆனால், தங்கள் வாழ்வை எண்ணியல்ல; தம் இனத்தின் வாழ்வை எண்ணிய எதிர்கால சந்ததியின் வாழ்வை, தாயக சுதந்திரத்தின் வாழ்வை எண்ணிய, உன்னதமிகு துடிப்பு. ஆதலால் வெல்லமென உயிர் இவர்களுக்குச் சுவைக்கவில்லை; சாவினைத் துச்சமென நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டார்கள்.

உலகிலே மிகச் சிறந்ததெனக் கருதப்பட்டு வந்தன சில தானங்கள்; அவற்றினது பெறுமதியே இழந்து போய் விட்டது எம் மாவீரர் தானத்தால்; இது உயிர்த் தானம்; வளைந்து கிடந்த இனத்தை நிமிரச் செய்தது; எம் தேசிய எல்லைகளை உயர வைத்தது; தேசியக் கொடியினை உயர்ந்த வைத்தது. வான் வரை உயர்ந்து முகிலினை வருடி விடுகின்றது எமது கொடி. அனைத்துலகுமே எம்மை பிரமிப்பாய் நோக்குகிறது;

இந்தச் சாதனையாளர்களே, "எமது மாவீரர்கள்" என் கையில், எம்முள்ளே உறுதி பெருகிறது; நெஞ்சு நிமிர்கிறது; உயிர் மூச்சில் பெருக் வலு பிறக்கிறது. சகல அடக்கு முறைகளையும் தகர்த்தெறிந்த சுதந்திர சமதர்ம தமிழீழம் கண்ணெதிரே மிளிர்கிறது.

(இ)

மாவீரர் நினைவுச் சித்திரம்

மாவீரர் நாள்-1992

மாவீரர்களே!

நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்திர்
நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்திர்
உங்களின் நினைவுடன் பயணம் தொடரும்
ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்.

- தமிழ்ழ மாவீரர் பணியகம்.

வலி-மேற்கு செஞ்சிலுவை நடத்தும் மாட்டுவண்டி அம்புலன்ஸ் சேவை

அராலி, நவ. 15

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்குப் பிரிவு மாட்டு வண்டி அம்புலன்ஸ் சேவை ஒன்றை நடத்தி வருகின்றது;

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் இருந்தே அம்புலன்ஸ் சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இதே வேளை—

இம்மாட்டு வண்டியை வைத்தியசாலையின் சேவைக்குப் புறம்பாக பொதுமக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் இவ் வண்டியை இலவசமாகப் பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-12)

காகிதாதிகள் அனுமதி அட்டைகள் மாத இறுதியில் வரும்

யாழ்ப்பாணம், நவ. 15

அடுத்த மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சைக்கான காகிதாதிகள், அனுமதி அட்டைகள் ஆகியவை இம் மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேரும்.

யாழ். பிராந்திய கல்வி பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு கொழும்பிலிருந்து மேற்கண்ட தகவல் கிடைத்துள்ளது.

இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் சுமுகமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும்—

விமானம் மூலம் வினாத்தாள்கள் எடுத்து வரப்படும் என்றும்— அறியவந்தது;

(த-3)

திருட்டு

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள வீடியோ கடையொன்று கடந்த வியாழக்கிழமை உடைக்கப்பட்டு ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி வாய்ந்த வீடியோ கமரா, ரி. வி. டெக் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவை திருடப்பட்டுள்ளன;

(த-17)

இருவர் கைது

கொழும்பு, நவ. 15

இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்குப் பெற்றோல், எண்ணெய், பற்றறிகள் கடத்திய இரண்டு இளைஞர்களை பேசாலையில் வைத்து படையினர் கைது செய்தனர் என கொழும்பும் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(த)

ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
01 — 03 — 1974

அரக்கர் அழிப்பில்:
15 — 11 — 1990

சதாசிவம் செல்வராணி (லதா)

அமுதினுமினிய எம் தமிழினச் செல்வமே!
அன்பாலே அமுதூட்டி
அருளாலே உலகை வளர்த்து
பருவ மாளீராய் நீவிர் பவனி வரும் நேரம்,

பாதகத்தான் ஏவிய ஷெல்லால்
பாரினில் எமைப் பிரிந்த சோகமதை
பாலமதை கடந்த போதும் - இப்
பாவியர் நாம் மறப்போமா?

ஆண்டு இரண்டான போதும்
அழிந்திடா உங்கள் நினைவால்
திதியினை நாடி நாமும் துதிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திக்காக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரியமுள்ள வாடுகிறோம்:
அப்பா, அம்மா, சகோதரிமார்.
பலாலி, காரைநகர். (5573)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வீடும், மூன்று பரப்புக் காணியில் விற்பனைக்கு உண்டு. யாழ். வளாகம், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உண்டு. முகவரி: 66, கிரிதரன் வீதி, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. வாங்க விரும்புவோர் நேரில் வரவும். [23268]

Singer Model - 237 ZIG ZAG (Italy) தையல் மெஷின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 66, சேர். பொன். இராமநாதன் றோட், திருநெல்வேலி தெற்கு. (பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு முன்னால்) [23222]

விற்பனையாகின்றது

எமது விலாசமிடப்பட்ட ஓவ்செட் பெரிய கலண்டர்கள் ரூபா 15/-க்கு விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு தகுந்த சலுகை வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [23188]

எம்மிடம் மூன்று அளவுகளில் கலண்டர்கள் விற்பனைக்குண்டு படங்கள் தனியாகவும், சிவிப் தனியாகவும் பெற விரும்புவர்கள், எம்மிடம் நேரடியாக தொடர்பு கொள்ளவும். மொத்தமாகக் கொள்ளவு செய்பவர்களுக்கு தகுந்த சலுகை வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை. [23189]

O/L மாணவர்களுக்கு

வருடாந்த சாதாரண தரப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி வினா - விடைகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். ஆக்கம்: நா. மயில்வாகனம். [5568]

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

மீனாட்சி கல்யாணம், ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரார்த்தனை, நவராத்திரி, ஆமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர், சான்றோர் யார்? ஆகிய இன்னும் பல போதனைக் குரிய அம்சங்களை உள்ளடக்கிய "ஸ்ரீராமகிருஷ்ணர் விஜயம்" விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. பூபாலகிருஷ்ணம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [கி-3778]

மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23194]

கராட்டே வகுப்புகள்

சொடோகான் பாணியிலான புதிய கராட்டே வகுப்புகள் திருநெல்வேலி [சந்தி] Y. M H. A. இல் ஆரம்பமாகவுள்ளன திங்கள், புதன், மாலை 4-30, சனி, ஞாயிறு காலை 6-00 ஆசிரியர் ச. தர்மராசா (2ஆம் கறுப்புப் பட்டியும், இலங்கை சொட்டோகான் கராட்டே சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத் திற்கான அதிகாரம் பெற்றவரும்) [23219]

மணமக்கள் தேவை

B. A. ஆசிரியர் 7இல் செவ்வாய் வயது 33, B. Sc. விரிவுரையாளர் 31, M. S. C. Computing 8இல் செவ்வாய் (அஸ்திரேலியா) 30, இவர்களுக்கு தகுந்த மணப்பெண்களை பெற்றோர் தேடுகின்றார்கள். விவரங்களுக்கு ஜாதகத்துடன் கடிதமூலம் நேரில் தொடர்பு: சுவாமியார், 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [23263]

மணப்பெண் தேவை

1947இல் பிறந்த, அழகிட்டம், 8இல் செவ்வாய்க் குற்றமுள்ள Tech. Asst. க்கு 35 — 39க்குள் மணப்பெண் தேவை. தொடர்பு: சுவாமியார் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கை கந்தர்மடம். [23264]

சோதிடம்

கைப்பலனறிஞர் - கோளறிவாளர் முப்பதாண்டு அனுபவம் தேர்ச்சியுண்டு, பிறநாட்டுப் பயணம், திருமணம்-தேவையான விவரங்களுடனும் அறிய, திருமணப் பொருத்தங்கள், மாணவர் பிரச்சினைகள், நோய்கள் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். செ. இராசேந்திரன், திருவுவம், கிரிதரன் வீதி, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. [23267]

ஆண்டு - 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுதே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. [கி-3755]

மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்காக கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம் / றோ. க / கிறிஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், கலைப்பொருவியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் [விடைகளுடன்] மலிவு விலையில் விற்பனையாகின்றன: Bond Institute, 582, Stanley Road, Jaffna. [சி 3754]

ஆண்டு - 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 11 - 1992 முதல் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond, Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3753]

வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீன்பார்வையுடன் கூடிய சைவநெறி, தரம் 11க்கான வினா-விடை ஆண்டு 11. ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்; எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [கி-3668]

நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் அமரர் வி. எம். ஆசைப்பிள்ளை நினைவுப் பேருரை சொற்பொழிவு நாளை பிற்பகல் 3-00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், "இனத்துவமும் தேசிய வாதமும்" [அரசியல் பரிமாணங்கள்] என்ற பொருளில் பேருரையாற்றுவார். [த]

ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்பட்ட செஞ்சோலை இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா வெளியீடு எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணியளவில் யாழ். பல்கலைக்கழக கலைரசபதி அரங்கில் நடைபெறும்.

எனது ஹோமியோபதி சிகிச்சை நிலையம்

சித்தன்கேணி சந்தியில் சுளிபுரம் வீதியில், 100 யார் தூரத்தில் நடைபெறுகின்றது.

டாக்டர் M. வேலுப்பிள்ளை.

[23221]

விண்ணக வாழ்வில்

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வேஜினி சேவியர்

உதிர்வு: 15-11-1987

நீறு பூத்த நெருப்பெனக் நெஞ்சத் தாறுமோ தாயே! ஐந்தாண்டாயினும்;

இவரின் பிரிவால் துயருறும், கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர், உறவினர்.

40, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

[23270]

இவ்வருடம் 730.6 மி. மீ. மழையே இதுவரை யாழ். நகரில் பதிவு

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்றுக் காலை 8-30மணி வரை 730.6 மில்லி மீற்றர் மழை பதிவாகி உள்ளதாக யாழ். வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குடாநாட்டில் கடந்த காலங்களில் பெய்த சராசரி மழை வீழ்ச்சியிலும் குறைந்தது ஆகும்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் காலை 8-30 மணி முதல் நேற்றுக் காலை 8-30 மணிவரையிலான 24 மணி நேரத்தில் 66.7 மில்லி மீற்றர் மழை யாழ். நகரில் பதிவாகி உள்ளது [இ]

ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 15 — 12 — 1953

மண்ணின் மடியில்: 28 — 11 — 1991

சதாசிவம் விஷ்ணுமோகன்

திதி: 15 — 11 — 1992

அன்பின் உருவமே! அறிவுச் கடரே, அழகுறப் பேசி இதயங்கள் கவர்ந்தவனே! பாசமிகு தனயனாய், அன்புக் கணவனாய், அன்புச் சகோதரனாய், உறவினனாய் எம்மையெல்லாம் அரவணைத்தாய். இன்று நீ எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று போனாலும் உன் அழகு முகம் எம்மை விட்டு அகலாது; எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த இந்நாளில் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
அன்புத் தாய், மனைவி, [ஜேர்மனி],
சகோதரர் சகோதரிமார்.

2/1, மருதடி றோட்,
யாழ்ப்பாணம். [23248]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 07 — 1921

மறைவு: 28 — 10 — 1991

அமரர் முத்துக்கிருஷ்ணபிள்ளை சுவாமிநாதர்

[பிரபல பரம்பரை ஆயுர்வேத வைத்தியர்]

திதி: 15—11—1992

அன்பின் இருப்பிடமாய், பண்பின் பிறப்பிடமாய், அறிவின் நிறைகுடமாய், வைத்தியத்தில் சிறந்தவராய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு எப்பொழுதும் நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரி.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம். [5428]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

சிந்தனை மாறின் கடினமல்ல

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியும், பதின்மூன்று வருடங்கள் ஸ்ரீலங்காவின் பிரதமராக இருந்து ஆட்சி நடத்தியவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பிரபாகரன் ஒரு கட்சியாக இல்லாத நிலையில் காணப்படும் எந்தத் தீர்வும் பயன் தரப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவின் இந்தக் கூற்று இரண்டு கருத்துகளுடையது. அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசாமல் வேறு எவருடன் பேசி எந்தவிதத் தீர்வை எட்டியும் பயனில்லை. அவ்வித முயற்சியினால் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது ஒன்று.

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை நடக்கும் பட்சத்தில் தலைவர் பிரபாகரனும் அதில் பங்காளியாக இருக்க வேண்டும். அவருடைய பிரதிநிதிகள் மட்டும் கலந்து கொள்வதால் பயனில்லை என்பது இரண்டாவது உள்ளார்த்தம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வே உகந்தது; அந்த அரசியல் தீர்வுக்கு பேச்சு வார்த்தை மூலம் சமரசம் காணப்பட வேண்டும். சமரசப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டிய பிரதானிகள் அரசாங்கத்தினரும், விடுதலைப் புலிகளுமே ஆவர்.

இவர்கள் இருசாராரும் எய்தும் தீர்வை நடைமுறைப் படுத்துவதற்கு தென்னிலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அரசியல் லாபம் கருதி நியாயமான, நீதியான தீர்வையும் எதிர்க்கட்சிகள் எதிர்த்தமையே தெற்கின் கடந்த 45 வருட கால அரசியல் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அந்தப் போக்கை மாற்றித் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற வல்ல நியாயமான தீர்வுக்கு ஆதரவளிப்பது என்ற கொள்கையை தெற்கின் எதிரணிகள் வகுத்துக் கொள்வது அவசியம்.

விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள்; ஆகையால் அவர்களுடன் பேச வேண்டிய தேவை இல்லை. அவர்களுடன் பேசாமலே, அவர்களை ஒரங்கட்டிவிட்டு அல்லது தோற்கடித்துவிட்டு, ஒழித்துக் கட்டிவிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற முந்திய சிந்தனையைத் தென்னிலங்கைத் தலைவர்கள் இப்போது மெது மெதுவாக மாற்றி வருகிறார்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய நிலைப்பாடு இதனையே எடுத்துக் காட்டுகிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தளவில் தான் ஒரு தீர்வை எய்தும் பட்சத்தில், அதனைத் தெற்கின் எதிரணிக் கட்சிகள் அரசியல் போட்டியின் நிமித்தம் எதிர்த்தால் அது தனக்குப் பாதகமாகி விடும் என்ற இயற்கையான பயம் இன்னமும் உண்டு. எனவே நியாயமான தீர்வை யார் வகுத்தாலும் அதனை எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனை தெற்கின் அரசியல் தலைவர்களுக்கு உதிக்க வேண்டும். அப்போது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமல்ல.

வடமராட்சி கிழக்கில் கிராமங்களினுள் கடல்நீர்!

தாளையடி, நவ. 15

கடும் காற்று, மழை காரணமாக வடமராட்சி கிழக்கில் கடல் பெருக்கு ஏற்பட்டு கரையோரக் கிராமங்களில் கடல்நீர் உட்புகுந்தது.

செம்பியன்பற்று, நாகர் கோவில் ஆகிய கிராமங்களிலும் அதனை அண்மித்த கிராமங்களிலும் கடல்நீர் புகுந்ததைபடுத்து அதிமுக்கியமான வகித்தோரும், சொந்த வீடுகளில் வகித்தோரும் மேட்டுப் பகுதியை அண்டிய பாடசாலைகள், தேவாலயங்களில் தஞ்சமடைந்தனர்.

மேற்படி கிராமங்களில் குடிநீரகள் பலவும் சேதமடைந்தன [ஒ-144]

புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாஜவாதி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தலைமையிலான தமிழக நல்லாட்சிக் குழு சமர்ப்பித்த இந்த அறிக்கையில் —

அவரது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியும், அரசியல் சட்டத்துக்கு முரணாக செயற்பட்டும் ஜெயலலிதா மேற்கொண்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் குறித்து அந்த மகஜரில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

புலிகள் தொடர்பாக அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு அரசியல் உள்நோக்கத்திற்காக தடா சட்டத்தை பயன்படுத்துகிறது; இந்தச் சட்டம் பயங்கரவாதிகளுக்கோ பிரிவினைவாதிகளுக்கோ எதிராகப் பயன்படுத்தவில்லை.

விடுதலைப் புலிகளை ஊடுருவ விடாமல் கண்காணிப்போம் என்கூறி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அரசு அந்தப் பணியில் பின்னுக்கு நிற்கிறது.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மருந்தும் டீஸலும் கடத்தப்படுகின்றன.

புலிகளை ஒடுக்குவதில் அச்சமற்றிருந்த காவல்துறையினரும், நீதித்துறையினரும் ஜெயலலிதா அரசினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் வதந்தியை மிழந்து, தனது பாதுகாப்புக்காக புலிகளுக்குப் பணம் தருவதாக புலிகளிடம் தூது அனுப்புகிறார். இதனால் காவல்துறையினரும், நீதித்துறையினரும் மனவுறுதி குலைந்து போயிருக்கின்றனர்; — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]

தமிழ்நாட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சில கிராமங்கள் வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டு, மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரம் என்னும் கிராமம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர் என்றும்—

தாமிரபரணி ஆற்றை அண்டிய பெரும் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், அப்பகுதிகளில் கமரர் ஆயிரம் வீடுகளும் 250 விசைப்படகுகளும் நீரினால் அள்ளுண்டு சென்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன;

கேரளாவிலும் சூறாவளியால் 17 பேர் உயிரிழந்தனர்; [ஒ-]

பலியானோர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரு குழந்தைகளும் முதியவர் ஒருவரும் அங்கு வீடு இடிந்ததில் உயிரிழந்தனர் என்றும்—

கொழும்பில் மரக் கிளை சரிந்து விழுந்ததில் கார்ப்பயணி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கில் 3 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்! மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து, மின் தாக்கியதிலும் இவர் உயிரிழந்தனர் என்றும் தகவல்கள் தெரிவித்தன. [ஒ-5]

சிரமதானம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெறும்;

கருத்தரங்குகள்

இன்றைய மாவீரர் எழுச்சி வாரக் கருத்தரங்குகள் சண்டிலிப்பாய் வடக்கில் கம்டுடைக் கலாசார சனசமூக நிலையத்திலும், நல்லூரில் நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்திலும், கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்திலும் —

யாழ்ப்பாணக் வடக்கில் வண்ணார்பண்ணை வள்ளுவர் சனசமூக நிலையத்திலும் —

உடுவில் வடக்கில் கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலையத்திலும் நடைபெற உள்ளன.

கைதடியில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திலும், கொடிகாமத்தில் அல்லாரை தெற்கு, நிதி சனசமூக நிலையத்திலும், மானாவில் கேடில் சனசமூக நிலையத்திலும், சாவகச்சேரியில் சங்கத்தானை இந்து யடிப் பிள்ளையார் கோவிலடியிலும் இன்றைய கருத்தரங்குகள் நடைபெறும்.

திருகோணமலை மாவீரர் எழுச்சி வாரக் கருத்தரங்கு தெற்கு பண்டிதர் குடியிருப்பில் இடம்பெறும்.

கடற்புலிகள் இன்று நடத்தும் கருத்தரங்குகள் பின்வரும் இடங்களில் இடம் பெறும்:-

★ வடமராட்சி வடக்கு - தொண்டமானாறு சனசமூக நிலையத்தில்—

★ வடமராட்சி கிழக்கு - எத்திராமன் சனசமூக நிலையத்தில்

★ வலிகாமம் கிழக்கு - பூம்புகார் ச.ச. நிலையம், மணிப்புரி ச.ச. நிலையம், கொழும்புத்துறை ச.ச. நிலையம்,

இன்றைய சிரமதானங்கள்

★ தெற்பவி பண்டிதர் குடியிருப்பில் வடிகால் அமைத்தலும், முகாம் சுத்திகரித்தலும்

★ வடமராட்சியில் எல்லங்களம் பொது மயானத்தைச் சீரமைத்தல்.

★ சங்கானை வடக்கில் சங்கானை பிரதான வீதியும், கலைநகர் நேருஜி சனசமூக நிலைய வீதியும்;

★ சண்டிலிப்பாயில் சண்டிலிப்பாய் பிரதான வீதியைத் திருத்துதல்.

★ உடுவிலில் உடுவில் ஆச்கிரமம், இணுவில் சிந்து முகாம் ஆகியவற்றைத் துப்புரவு செய்தல்;

★ நல்லூர் வடக்கில் கொக்குவிலில் நந்தாவில் வாய்க்கால் சீரமைக்கப்படும்;

★ கடற்புலிகளின் ஆதரவில் இன்று மருதங்கேணி வைத்தியசாலை சுற்றாடல் சுத்தம் செய்தலும் மரக் நடுவிழாவும் நடைபெறும். [ஒ-]

மலத்தியோன் முடிந்ததால் மலேரியா பரவும் ஆபத்து

வண்ணார்பண்ணை, நவ. 15

மலேரியா நுளம்பும் பெருக்கத்தைத் தடுக்கப் பாவிக்கும் மலத்தியோன் மருந்து கடந்த செப்டம்பர் மாதத்துடன் யாழ்; மலேரியா தடுப்பு இயக்கத்தினரிடம் முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மருந்தினை அனுப்பி வைக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், கூட்டுப்படைத் தலைமையகம், செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேசக் குழு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது ஆனால் இதற்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை.

யாழ் மாவட்டத்தில் மட்டும் மலேரியா நோய் பரவக் கூடிய இடங்களில் பாவிப்பதற்கு 3மோதக்களுக்கு 3 ஆயிரத்து 750 லிட்டர் கிராம் மலத்தியோன் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. [த-162]

14 ஆண்டுகளுக்குப் பின்னர்

மன்னிப்புச் சபை குழு இந்தியாவுக்கு விஜயம்

புதுடில்லி, நவ 15

சர்வதேச மன்னிப்புச் சபையின் நான்கு பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று — 14 ஆண்டுகளுக்குப் பின்னர் — இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளது.

மன்னிப்புச் சபைக் குழு ஒன்று இந்தியாவுக்குச் செல்வது 1978ஆம் ஆண்டிற் பின் இதுவே முதற்தடவையாகும்.

சபையின் முன்னாள் செயலாளர் இயன் மாட்டின் உட்பட்ட இக்குழுவினர் இந்தியாவில் மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்பதை மட்டுமே விசாரிக்க வேண்டும் எனவும் —

சபையினால் முன்னர் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆராயக்கூடாது எனவும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இதேசமயம் குழுவினர் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேச அனுமதி வழங்கப்படவில்லை.

காஷ்மீரில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் கொடுத்த அழுத்தம் காரணமாகவே இந்திய அரசு மன்னிப்புச் சபைக் குழுவை இந்தியாவுக்கு அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-6]

கைது!

புதுடில்லி, நவ. 15

இந்திரா காங்கிரஸ் எம்.பிக்களில் ஒருவரான மணிசங்கர ஐயரும் அவரது ஆதரவாளர்களும் உத்தரப்பிரதேசத்தில் வைத்து அந்த மாநில அரசினால் கைது செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்திலிருந்து அயோத்திக்கு அரசியல் யாத்திரை ஒன்றை நடத்திச் சென்றபோதே, அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதாகத் தெரிவித்து அவர்களை மாநில பாரதிய ஜனதா அரசு கைது செய்தது.

அயோத்தி பாபரி மசூதிக்கு அருகில் — சர்ச்சைக்குரிய நிலத்தில் — மேற்கொள்ளப்படும் ராமர் கோவில் கட்டுமானப் பணிக்கு பாரதிய ஜனதா அரசு ஆதரவளிப்பதை ஆட்சேபித்தே மணிசங்கர ஐயர் இந்த யாத்திரையை ஆரம்பித்தார்.

காலஞ்சென்ற ராஜீவ் காந்தியின் நெருங்கிய சகாவான மணிசங்கர ஐயர், ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது முக்கிய அரசு அதிகாரியாகச் செயற்பட்டவர்; [த-உ]

ராஜீவ்காந்தி கொலை வழக்கு:

குற்றப்பத்திரிகை தி. மு. க. தொடர்பு பற்றி கூறவில்லை

கருணாநிதி சொல்கிறார்

சென்னை, நவ. 15

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயிரம் பக்கக் குற்றப் பத்திரிகையில் எங்கேயாவது தி.மு.கவுக்கு தொடர்பு உள்ளது என்று குற்றஞ்சாட்டும் ஒரு வரியாவது உள்ளதா?

இவ்வாறு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

அன்றைய தேர்தலின்போது தொலைக்காட்சி, வானொலி மூலம் தி.மு.க மீது பழி சுமத்தியவர்கள் இப்போது என்ன சொல்கிறார்கள் என்றும் அவர் கேட்டார். [த-5]

பேச்சு, கட்டுரைப் போட்டி: பரிசளிப்பு விழா நாளை

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை நிகழ்மை பிற்பகல் 1 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

ஜிகிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் யாழ் மாநகர சபையும், கல்வி அலுவலகமும் இணைந்து நகரப்புற அடிப்படைச் சேவைகள் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்படி போட்டிகளை மாணவர்களிடையே நடத்தியிருந்தன.

யாழ்; மாநகர ஆணையாளர் திரு. வே. வேலாயுதராசா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ்; மாநகர கலாநிதி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் கலந்து கொள்கிறார். [த-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசாம்பிகை கனகரத்தினம்

டாக்டர் நா. கனகரத்தினம் (ஓய்வுபெற்ற R. M. P.) அவர்களின் அன்பு மனைவி இராசாம்பிகை 14-11-92 இல் காலமானார். இவர் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வுபெற்ற நாகவிநாயகம் ஆகியோரின் அன்பு மகளும், இராஜேஸ்வரி, விக்னேஸ்வரன், நரேந்திரன், கனகேஸ்வரி, சுரேந்திரன், இரவீந்திரன், யோகேந்திரன், கனகரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் ஜோதிலிங்கம், டாக்டர் ஞானச்சந்திரன், ரதிலக்ஷ்மி, நாகேஸ்வரி, சத்தியரூபி, சுகன்யா, கந்தமலர் ஆகியோரின் மாமியாரும், பிரதீபன், சிவாஞ்ஜினி, ஷயந்தன், சிவானி, ஹரிஷன், கஜாவி, டிலானி, றஜீவன், றெபேக்கா ஆகியோரின் அருமைப் பேரத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15-11-92 காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
டாக்டர் நா. கனகரத்தினம்

91, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
[23275]

சின்னையா கந்தவனம்

(இளைப்பாறிய கிறாப்பர்)

கி. கந்தவனம் காலமானார். இவர் காலஞ்சென்ற மகிழையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கி. குழந்தைவேல், ம. செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், திலகவதி, அனுசுயா, சூரியா, காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் தந்தையாரும், நவலையா பழநிச்சாமி சவரத்தினம் ஆகியோரின் மாமனாரும், அற்புதராஜன், மதிவதனி, ரவிராஜன், சரவணபவன், பவதாரணி, விஜிபதர்சினி, கௌசி, கேமதாரணி, சச்சிதானந்தன், மேகலா, உமாதாரணி, கோமதி, அஞ்ஜனா, அரவிந்தன், அனுசந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15-11-92 காலை 8-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பழநிச்சாமி

99, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[23278]

சங்கரப்பிள்ளை தம்பிஐயா

திரு: சங்கரப்பிள்ளை - திருமதி கிள்ளாச்சிப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் திரு. கார்த்திகேசு - திருமதி கிள்ளாச்சிப்பிள்ளை கார்த்திகேசு அவர்களின் அன்பு மருமகனுமாகிய இணுவிலைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தம்பிஐயா அவர்கள் (மலேயன் பென்சனர்) 14-11-1992 இல் காலமாகிவிட்டார். அன்னார் திருமதி கிள்ளம்மா தம்பிஐயாவின் அன்புக் கணவரும் தேவராசா (பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி தேவராணி சுந்தரலிங்கம், திருமதி கமலராணி உமாகேஸ்வரன் (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), திருமதி தர்மகுணராணி சண்முகலிங்கம், திருமதி அருந்தவராணி சதிர்காமநாதன், இணுவை சுப்பிரமணியம் (கடவுள்) (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வானந்தராஜா (செல்வம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், இரு சுந்தரலிங்கம் (வடமாநில கல்விப் பணிப்பாளர்), பெ. உலகேஸ்வரன் (அமெரிக்கா), சிரு சண்முகலிங்கம் (ஆசிரியர், சுதுமலை வடக்கு த. க. பாடசாலை), இ. சதிர்காமநாதன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), திருமதி அருந்ததி ஆனந்தகௌரி தேவராசா, திருமதி செல்வநாயகி இணுவை சுப்பிரமணியம், திருமதி ஜெயராணி செல்வானந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன் (யாழ். மருத்துவபீட மாணவன்), முரளிதரன் (லண்டன்), சுபாஷினி, மீரா (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்), சுபர்னா, கலன்யா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்), ஆர்த்திகா (இணுவில் மத்திய கல்லூரி மாணவி), நிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-92) ஞாயிற்றுக்கிழமை இணுவில் மேற்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
த. தேவராசா
(மகன்)

[23279]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இன்று

யாழ்ப்பாணம், நவ. 15
வலிகாமம் வடக்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று இன்று மாலை 4 மணிக்கு மகிலாலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என சங்கம் அறிவித்துள்ளது. (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 15
"தீப பூஜை வழிபாடு" என்ற நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் மண்டபத்தில் நடைபெறும். (ஒ)

நாளை

யாழ்ப்பாணம், நவ. 15
"சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாக பெண்கள்" என்னும் தலைப்பில், மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடத்தவுள்ளது. (ஒ)

★ ★ ★

மரம் நடுகைப் போட்டித் திட்டத்தில் பங்குபற்றும் மாணவர்கள், கல்லூரி அதிபர்கள், கொத்தணிக்குழு கோட்டக்குழுவில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

தென்மராட்சி, நவ. 15
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய நடன ஆசிரியை திருமதி யசோதா விவேகானந்தனின் "பரத நாட்டிய அடிப்படை அறிவும் ஆரம்ப விளக்கமும்" என்னும் நூல் அறிமுக விழாவும் நூல் ஆய்வரங்கும் நாளை நண்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறும். தென்மராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (உ-117)

★ ★ ★

கழிபுரம், நவ. 15
கழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் திரு. செ. பத்மநாதனின் சேவையைப் பாராட்டும் விழா நாளை காலை 9 மணி முதல் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். (உ-28)

குறைந்த விலையில் கிருமிநாசினி

யாழ்ப்பாணம், நவ 15
யாழ். மாவட்டத்தில் நெற் செய்கையாளர்களின் நன்மை கருதி புகையிலை மருந்தான எம். சீ. பீ. ஏயும், குளோறோபைரிபோஸ் என்னும் கிருமிநாசினியையும் தற்போது குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

எம் சீ பீ ஏ. 200. 400 மில்லீற்றர்களிலும், குளோறோபைரிபோஸ் 400மில்லி லீற்றர்களிலும் யாழ் மாவட்ட தமிழீழ பொருள்மிகு மேம்பாட்டுக் கழக வட்ட இணைப்பாளர் செயலகங்களில் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தமிழீழ மீட்பு நிதி...

(2 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கார்த்திகை — 1992

யா/ந/33	792	1240
1582	2633	3343
4650	5034	5175
5936		

மரண அறிவித்தல்கள்

கணேஸ்வரி இராஜசுந்தரம்

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த திருமதி கணேஸ்வரி இராஜசுந்தரம் அவர்கள் சனிக்கிழமை (14-11-92) அதிகாலை 6-00 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் வலி. தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க. இராஜசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்பதிப்பிள்ளை, திருமதி மகேஸ்வரி ஆகியோரின் கிரேஷ்ட புத்திரியும், திருமதி நாகேஸ்வரி ராதாகிருஷ்ணன், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி சிவபாதசுந்தரம், மற்றும் ஸ்ரீகிருஷ்ணராஜா, திருமதி சுமலேஸ்வரி நடராஜா, விக்னேஸ்வரன் (C.E.B. வவுனியா), திருமதி கருணேஸ்வரி இரத்தினராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நல்லூர் காலஞ்சென்ற கந்தசாமி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-11-1992) ஞாயிறு முற்பகல் 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாவிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
திரு. க. இராஜசுந்தரம்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
[23271]

சுந்தரம் மங்களேஸ்வரன்

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முத்திரைச்சந்தையை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சுந்தரம் மங்களேஸ்வரன் 11-11-1992 இல் கனடாவில் காலமானார்.

இவர் கனடாவில் உள்ள யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுபாஷினி (கனடா), மயூரன் (கனடா), ரமேஷ் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமளேஸ்வரன், விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற சிவலேஸ்வரி, உதயமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசமணியின் பெறாமகனும், இராசரத்தினம், ரதிதேவி ஆகியோரின் மைத்துனரும், புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற விதுர் சரவணமுத்து தம்பதிகளின் மருமகனும், சறோசினிதேவி, பாலகப்பிரமணியம் (இந்தியா), இராசஇராசேஸ்வரி, திருச்செல்வம் (கனடா), நவராசா (சுவிஸ்லாந்து), விக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இவருடைய துக்க நிழ்வுகள் 812, பருத்தித்துறை வீதி நல்லூரில் உள்ள இவருடைய இல்லத்தில் இடம் பெற்றுவருகின்றன.

தகவல்:
ஐ. சரவணமுத்து
(மாமனார்)

812, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
[23272]

திருமதி சங்கரபாலசூரியர் செல்வமணி

திருமதி சங்கரபாலசூரியர் செல்வமணி காலமாகிவிட்டார். அன்னார் முத்தையா சங்கரபாலசூரியரின் (முன்னாள் புகையிரதப் பகுதி மின்சார அத்திவட்சகர்) அன்பு மனைவியும், திருமதி சு. லாவதி, நவபாலசூரியர் (Tokyo Cement Trinco), திருமதி திருத்தணிகாசலம் அமிர்தவதி (மட்டக்களப்பு), சிவபாலசூரியர் (கனடா), செல்வி சாந்தவதி, குகபாலசூரியர் (அமெரிக்கா), சசிபாலசூரியர் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் (கணக்காளர், வர்த்தகத் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருத்தணிகாசலம் (தெற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், மட்டக்களப்பு), திருமதி ந. கண்மணி (திருகோணமலை), திருமதி கி. சுசீலா (கனடா), திருமதி கு. யசோதா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும்—

சுந்தரவதனி, சுந்தரேசன், செல்வகௌரி, சுமந்திரன், ஸ்மிருதி, மயூரன், சாயிகஜன், சாயிகிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரத்தியாரும், காலஞ்சென்ற திருமதி சபாபதிப்பிள்ளை, நாகரத்தினம், காலஞ்சென்ற திருமதி தம்பிநாதர் நவமணி, நவாலியூர் நா. சச்சிதானந்தன் (கலை விமர்சகர், மொழிபெயர்ப்பாளர்), திருமதி சிவநாதன் மங்களேஸ்வரி (சென்னை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சுன்டிக்குளி, 26, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்டி மயானத்திற்கு இன்று (15-11-92) ஞாயிறு காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
முத்தையா சங்கரபாலசூரியரும்,
பிள்ளைகளும்

26, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுன்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
[23277]

மேலும் மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org